முருகப்பெருமான் துணை

**மகான் பரத்துவாசர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.05.2022, சனிக்கிழமை

1. கருமவினை போக்கிக் காத்திட
கந்த வேலனாக வந்த குருவே
ஆறுமுக அவதார அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தகர் திங்கள்
குறைவிலா முப்பானோர்திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 31 ம் நாள், 14.05.2022 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு பரத்துவாசர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை ஞான வழிகள் காட்டும்
ஞானகுருவாய் அரங்கன் இருக்க
ஞாலமதில் அரங்கனை நாடிவரும்
4. நாடிவரும் மக்கள் அனைவரும்
ஞானம்பெறுவது உறுதி உறுதி
தேடியே அரங்கன் தருமத்தை
தேசமெங்கும் செய்யும் மக்கள்
5. மக்களெல்லாம் கலி இடரினை
மார்க்கமுடன் வென்று சடுதி
தேக்கமின்றி வளருவது உயர்வது
தெரிவிப்பேன் உறுதி உறுதி
6. உறுதிதந்து உயர்பாதுகாப்பு தந்து
உடனிருந்து சூட்சுமமாக அருளும்
ஆறுமுக ஞானி அரங்கனை
அனுகினாலே ஆபத்து விலகும் அப்பா
7. அப்பனே ஞானச்சுடராய்
அகத்தூய்மை புறத்தூய்மை
காப்பாக அருளும் தவசியே
கலியில் உன்னை கண்டவர் எல்லாம்
8. எல்லோரும் தேறுவர் மீள்வர்
எந்த சிக்கலும் இல்லா வாழ்வாய்
வல்லமை கண்டு உயருவர்
வறுமை அனுகா வளம் அடைவர்
9. அடையவே தவபலம் தருமபலம்
அனைத்தையும் இணைத்துமே
தடையற வரமாக அருளும்
தவராஜன் அருளும் ஆசியும்

10. ஆசியும் மனித சக்தியை
அழியாமை எனும் வழிகாட்டி
ஆசியினால் ஞானி ஆக்கும்
ஆறுமுகன் தலைமை வருகின்ற

11. வருகின்ற ஞான ஆட்சிக்கு
வல்லமைபட வழிவகையாக
குருவரங்கன் சேவை துணைவரும்
குறையிலா ஞான ஆட்சி மலரும்

அருளாசி முற்றே

–சுபம்–